# TNPSC GROUP I MAIN EXAM – 2024
# MANDATORY TEST V
# PAPER III – UNIT I INDIAN POLITY

**Total Marks: 250** **Time: 3 hrs**

**Section A**

**10 x 10 = 100**

**Answer the following in 150 words each**

1. Dr. B.R. Ambedkar famously referred to the Comptroller and Auditor General of India as "probably the most important officer in the Constitution of India". Do you agree?
இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரை "இந்திய அரசியலமைப்பின் மிக முக்கியமான அதிகாரி" என்று டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

2. Discuss the role of the Vice-President of India as the Chairman of the Rajya Sabha.
மாநிலங்களவையின் தலைவராக இந்திய துணை குடியரசுத்தலைவரின் பங்கைப் பற்றி விவாதி.

3. How far do you think Cooperation, Competition and confrontation have shaped the nature of federalism in India? Give recent examples to validate your answer.
கூட்டுறவு, போட்டிமனப்பான்மை மற்றும் முரண்பாடுகள் ஆகியவை இந்தியாவில் கூட்டாட்சியின் தன்மையை எவ்வளவு வடிவமைத்துள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? சமீபத்திய உதாரணங்களுடன் விளக்கவும்.

4. The efficiency of the collegium system has been challenged time to time in terms of its independence and transparency of judicial appointments. Critically examine.
கொலிஜியம் அமைப்பின் செயல்திறன் அதன் சுதந்திரம் மற்றும் நீதித்துறை நியமனங்களின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அவ்வப்போது ஏற்படும் சவால்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

5. "Every Matter of Public Interest cannot be a Matter of Public Interest Litigation". Evaluate
"பொது நலன் சார்ந்த ஒவ்வொரு விடயமும் பொது நல வழக்காக இருக்க முடியாது". மதிப்பிடுக

**(OR)**

Is it possible to distinguish between judicial review and judicial activism in India? Does the recent behaviour of the Indian judiciary involve more of judicial activism? Argue with suitable examples.
இந்தியாவில் நீதித்துறை மறுஆய்வு மற்றும் நீதித்துறை செயல்பாடு ஆகியவற்றை வேறுபடுத்திப் பார்க்க முடியுமா? இந்திய நீதித்துறையின் சமீபத்திய நடத்தை நீதித்துறை செயல்பாடுகளில் அதிகம் பங்குபெறுகிறதா? தகுந்த உதாரணங்களுடன் வாதிடுக.

6. What is the difference between the Council of Ministers and the Cabinet?
அமைச்சர்கள் குழுவுக்கும் அமைச்சரவைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

7. Evaluate the District Collector's use of technology in disaster management.
பேரிடர் மேலாண்மையில் மாவட்ட ஆட்சியர் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துகிறார் என மதிப்பீடு செய்க.

8. Analyze the role and responsibilities of the Speaker of Lok Sabha in ensuring effective functioning of the House. What measures can be taken to strengthen the impartiality and autonomy of the Speaker in performing their duties?
மக்களவை திறம்பட செயல்படுவதை உறுதி செய்வதில் அவைத்தலைவரின் பங்கு மற்றும் பொறுப்புகளை பகுப்பாய்வு செய்க. அவைத்தலைவரின் பாரபட்சமற்ற தன்மை மற்றும் சுயாட்சியை பலப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம்?

9. Parliament is a platform to deliberate, discuss and decide and not for disruptions in a democracy. Comment.
"நாடாளுமன்றம் என்பது விவாதித்து முடிவெடுப்பதற்கான ஒரு தளமே தவிர, மக்களாட்சியில் இடையூறுகளுக்கான தளம் அல்ல". இந்த கூற்று குறித்து உங்கள் கருத்து என்ன?

10. Evaluate the need to create regional branches for the Supreme Court in India.
இந்தியாவில் உச்ச நீதிமன்றத்திற்கான பிராந்திய கிளைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை மதிப்பிடுக.

**(OR)**

Assess the role of the Finance Commission in maintaining fiscal federalism in India. Do you agree that it should be given a permanent status?
இந்தியாவில் நிதிக் கூட்டாட்சி முறையைப் பின்பற்றுவதில் நிதி ஆணையத்தின் பங்கை மதிப்பிடுக. அதற்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

## SECTION B

**10 x 15 = 150**

**Answer the following in 250 words each**

11. Civil Services in India were designed to achieve the goals of neutrality and effectiveness, which seems to be lacking in the present context. Do you agree with the view that drastic reforms are required in Civil Services? Comment.
இந்தியாவில் குடிமை பணிகள் நடுநிலை மற்றும் செயல்திறன் ஆகிய இலக்குகளை அடைவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, ஆனால் தற்போதைய சூழலில் இது இல்லாதது போல் தெரிகிறது. குடிமை பணிகளில் கடுமையான சீர்திருத்தங்கள் தேவை என்ற கருத்துக்கு நீங்கள் உடன்படுகிறீர்களா?

12. Critically examine the emergency powers of the President of India and their impact on the democratic functioning of the country.
இந்திய குடியரசு தலைவரின் அவசரகால அதிகாரங்கள் நாட்டின் மக்களாட்சி செயல்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்க.

13. Enumerate the powers and functions of the Indian Prime Minister. How has it changed in the recent past?
இந்தியப் பிரதமரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளைப் பற்றி விவாதி. சமீப காலத்தில் அதில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து விளக்குக.

14. Do you agree that local self-governance in rural India has ensured increasing people's participation in the political system? Give reasons for your answer.
ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் அரசியல் அதிகாரத்தில் மக்கள் பங்கேற்பது அதிகரித்துள்ளது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? அதற்கான காரணங்களைக் கூறுக.

15. Discuss the significance of the Election Commission of India in ensuring free and fair elections, and analyze the challenges it faces in contemporary times.
சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தலை உறுதி செய்வதில் இந்திய தேர்தல் ஆணையத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதி. சமகாலத்தில் அது எதிர்கொள்ளும் சவால்களை பகுப்பாய்வு செய்க.

**(OR)**

Critically analyze the One Nation, One Election proposal in light of India's federal structure and diverse regional political landscapes.
இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பு மற்றும் பல்வேறு பிராந்திய அரசியல் சூழல்களின் அடிப்படையில் ஒரு நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை பகுப்பாய்வு செய்க.

16. Analyze the doctrine of separation of powers in the Indian context. Discuss the challenges to its effective implementation and suggest measures to strengthen the system.
அதிகாரப் பிரிவினை கோட்பாட்டை பகுப்பாய்வு செய்க. அதை திறம்பட செயல்படுத்துவதில் ஏற்படும் சவால்களைப் பற்றி விவாதி மற்றும் அதை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்க.

17. The office of the Governor, often finds itself embroiled in political controversies. Suggest measures to ensure its neutrality and effectiveness in the Indian federal system.
ஆளுநர் அலுவலகம், அடிக்கடி அரசியல் சர்ச்சைகளில் சிக்கிக் கொள்கிறது. இந்திய கூட்டாட்சி அமைப்பில் அதன் நடுநிலை மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்க.

18. Explain the constitutional provisions under which Legislative Councils are established. Review the working and current status of Legislative Councils with suitable illustrations.
சட்ட சபைகள் நிறுவப்பட்ட அரசியலமைப்பு விதிகளை விளக்குக. அதன் செயல்பாடு மற்றும் தற்போதைய நிலையை மதிப்பாய்வு செய்க.

19. ‘Even after 75 years of independence, women’s representation in Lok Sabha has not increased much.’ Discuss the reasons and suggest measures to increase women representation in Parliament.

‘சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகும், மக்களவையில் பெண்களின் பிரதிநிதித்துவம் பெரிதாக அதிகரிக்கவில்லை.’ அதற்கான காரணங்களை விவாதித்து, மக்களவையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்க.

20. Analyze the role of the judiciary in shaping and interpreting the Constitution of India and its impact on the functioning of democratic institutions in the country.

இந்திய அரசியலமைப்பை வடிவமைப்பதிலும், விளக்குவதிலும் நீதித்துறையின் பங்கு மற்றும் நாட்டில் ஜனநாயக அமைப்புகளின் செயல்பாட்டில் அதன் தாக்கத்தையும் பகுப்பாய்வு செய்க.

**(OR)**

Explain the relationship between the Union Government and the Union Territories in terms of legislative and executive powers.

சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரங்களின் அடிப்படையில் மத்திய அரசுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் இடையிலான உறவை விளக்குக.

APPOLO STUDY CENTRE